பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

29 03 2025 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சத்தீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 16 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

2. சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில், 62 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

4. மியான்மர் நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரமாக அதிகரித்துள்ளது.

5. சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<>>>>>

சத்தீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 16 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சுக்மா மாவட்டத்துக்கு உட்பட்ட வனப்பகுதியில் நக்சலைட் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நேரிட்டது.

இதில் 16 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும், பாதுகாப்புப்படையினர் இரண்டு பேர் காயமடைந்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

16 நக்சலைட்டுகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் கூறுகிறார்.

அப்பகுதியில் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கிடையே, நக்ஸலைட் பிரச்சினைக்கு முடிவு கட்டுவதில், மத்திய அரசு தமது உறுதிப்பாட்டை நிலைநிறுத்தி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 16 நக்ஸலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டதோடு, ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வன்முறை எந்தவொரு மாற்றத்தையும் கொண்டு வராது என்று கூறியுள்ள அவர், வளர்ச்சியும், அமைதியும்தான் மாற்றத்தை கொண்டு வரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நக்ஸலைட்டுகளை ஆயுதங்களை கைவிட்டுவிட்டு, ஜனநாயக பாதைக்கு திரும்ப வேண்டும் என்று திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேசிய சுற்றுச்சூழல் மாநாட்டினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ், கரியமில வாயு வெளியேற்றத்தை குறைப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

இதற்கிடையே, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதற்காக, மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் காரணமாக உற்பத்தியும் அதிகரித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சூரிய ஒளி மற்றும் காற்றாலை மின் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில், 62 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இந்த திட்டத்தின்கீழ், 155 ஹெலிகாப்டர்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு, 8 ஆயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

விவசாயிகளுக்கு தரமான உரங்கள் மானிய விலையில் கிடைக்க வேண்டும் என்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஊட்டச்சத்து அடிப்படையிலான உரமானியத்திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

27 ஆயிரத்து 216 கோடி ரூபாய் மதிப்பிலான இந்த திட்டம் மூலம், விவசாயிகளுக்கு உர மானியம் தொடர்ந்து கிடைக்க வகை செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மண்வளத்தை அதிகரிப்பதற்கும், உற்பத்தியை பெருக்குவதற்கும், உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இந்த நடவடிக்கை உதவிடும் என்றும் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்தியா வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்பட உள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

உற்பத்திக்கான முனையமாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

தொழில்துறையினர் எதிர்கொண்டுள்ள சட்ட ரீதியிலான பிரச்சினைகளுக்கு சமரச மையங்கள் மூலம் தீர்வுகாணப்பட வேண்டியது அவசியம் என்றும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பழங்கள் ஏற்றுமதி தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஐக்கிய அரபு எமிரேட் மற்றும் ஆஸ்திரேலியா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இதற்கு உதவியதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஐந்தாண்டுகளில் பழங்கள் ஏற்றுமதி 47 புள்ளி ஐந்து சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் திரு ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் வன்கொடுமையின் காரணமாக பதிவு செய்யப்படும் வழக்குகள் 6 சதவீதம் குறைந்துள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை கண்காணிப்புக்குழு கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - ஸ்டாலின் 35 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

தெலங்கானாவில் குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம் நாளை முதல் செயல்படுத்தப்பட உள்ளதாக அம்மாநில பொது விநியோகத்திட்டத்துறை அமைச்சர் திரு உத்தம் குமார் ரெட்டி கூறியுள்ளார்.

ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தெலங்கு வருடப்பிறப்பை முன்னிட்டு நாளை இந்த திட்டம் தொடங்கப்படுவதாக தெரிவித்தார்.

இந்த திட்டத்தின்கீழ், தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்கள் மாதந்தோறும் ஆறு கிலோ அரிசியை இலவசமாக பெற முடியும் என்றும் அவர் கூறினார்.

இந்த திட்டத்தின்கீழ், 10 லட்சம் பேர் பயனடைவார்கள் என்றும் திரு உத்தம் குமார் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<>>>>>

அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப், கனடா பிரதமர் திரு **Mark Carmey** –ஐ தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தக உறவை வலுப்படுத்தும் நோக்கில், திரு டொனல்டு ட்ரம்ப் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்க அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாகவும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

மியான்மர் நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரமாக அதிகரித்துள்ளது.

இருப்பினும், இந்த நிலநடுக்கத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுவதாக அமெரிக்க செய்தி நிறுவனங்கள் கூறியுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து நில அதிர்வுகளும் உணரப்பட்டு வருவதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இதற்கிடையே, மியான்மருக்கு நிவாரணப்பொருட்களை மத்திய அரசு வழங்கி வருகிறது.

இதுவரை, மூன்று விமானப்படை விமானங்கள் மூலம் நிவாரணப்பொருட்கள் அந்நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

சென்னையில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 10-12, 12-10, 15-13, 6-11, 11-5 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் **Andre Bertelsmeier**-ஐ வென்றார்.

-------------------

ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ஸ்பெயினின் **David Vega Hernandez** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 7-6 என்ற செட் கணக்கில், செக் குடியரசின் **Matej Bocel -** போலந்தின் **Szymon Walkow** இணையை வென்றது.

------------

அஹமதபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aryan Shah** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 6-2, 6-0 என்ற செட்கண்க்கில் இந்தியாவின் **Kriesh Tyagi** –யை வென்றார்.

**<<<<<>>>>>**